# வெள்ளி

# VELLI

News Magazine

30 சதம்



NAVAM



## சீனாவும் ஸ்ரீ லங்காவும்

15-7-72

# சீனுவும் ஸ்ரீலங்காவும் NAYA

இலங்கைப் பிரதமர் கடந்த மாதம் சீனுவுக்கு விஜயம் செய்தார்.

அவருக்கு மகத், மகத்தான வரவேற்பு அங்கே!

அமெரிக்க ஜனுதிபதி சில மாதங்களுக்கு முன்னுள் பெரிய பெரிய முன்னேற்பாடுகளுடன் சீனுவுக்கு சென்றபோது,

சீனு தூங்கி வழிந்தது.

எங்கள் குட்டி இலங்கையின் பிரதமர் அங்கே சென்றபோதோ எந்த வெளிநாட்டுத் தலைவருக்கும் கிடைக்காத மகத்தான வரவேற்பு கிடைத்திருக்கிறது!- வெறும் வரவேற்பு மட்டுமல்ல; பல கோடி ரூபாக்களை வட்டியில்லாக் கடனுகவும் தந்து தனது நல்லெண்ணத்தை செயலிலும் காட்டியிருக்கிறது சீனு!

இந்தச் சந்தர்ப்பத்தில்—

இலங்கையைச் சீனுவுக்கு விற்றுவிட்டார் பிரதமர், என்று எதிர்க் கட்சியிலிருந்து குரல் கேட்கிறது.

இலங்கை, சீனுவுக்குச் சார்பான கம்யூனிஸ நாடல்ல; இதற்கு முன் சீனுவுக்குப் பெரிய உதவிகள் செய்த நாடுமல்ல. இது ஒரு நடுநிலை நாடு.

இந்த நடுநிலை நாட்டின் மீது சீனுவின் கருணைவெள்ளம் பிரவாகிப்பதன் காரணம் என்ன?

இந்திய-சீன உறவு திருப்திகரமானதல்ல.

ரஷ்ய-சீன உறவும் சந்தோஷமானதல்ல.

இந்தியாவும் ரஷ்யாவும் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றன.

பூகோள அமைப்பில் இந்தியாவோடு ஒட்டிக்கொண்டு இலங்கை இருக்கிறது.

இந்த அமைப்பில் இருக்கும் இலங்கையில் தன்னுடைய செல்வாக்கு இருப்பது சமயத்துக்கு உதவும் என்று சீனு கருதுகிறதா?

இப்படியான சந்தேகங்களெல்லாம் பொய்யாகவே போகட்டும்!

சீனு தக்க சமயத்தில் எங்களுக்குக் கௌரவத்துடன் உதவி செய்திருக்கிறது. அதற்கு எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்போம்.

அதே சமயத்தில்,

எமது நடுநிலைக் கொள்கை தவறிப் போகாமலிருக்க, மற்ற நாடுகளுடனும் நல்லுறவுகளை தொடர்ந்து பலப்படுத்தி, இலங்கையின் கௌரவத்தை எமது பிரதமர் காப்பாற்றுவார் என்று நம்புவோம்!

**மௌத்கல்யன் — "மந்திரம்" இனிக்கும் கதை அடுத்த இதழில்!**



■ சமீபத்தில் நடந்த யூ. என். பி. விசேட கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளராக ஜே. ஆர். ஜயவர்த்தனா தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அவருடைய பெயரை டட்லியே பிரேரித்தார். டட்லி — ஜே. ஆர். பிணக்குகளெல்லாம் இப்போதைக்குத் தீர்ந்துபோயிருக்கின்றன. ஆயினும் ஏற்பட்ட பிணக்குகளால் உண்டான காயம் உள்ளுக்குள் இருக்கத்தான் செய்யும். எப்போது மறுபடியும் புண்ணாக்குமென்று சொல்ல முடியாது!

■ கடந்த வருடம் இந்தியா — பாகிஸ்தான் யுத்தம் இரண்டு வாரங்களே நடைபெற்றது. அதற்கிடையில் பலியானவர் தொகை 3000. காயமடைந்தவர்: 9500. — இந்தியாவுக்கு வெற்றி. இறந்துபோன 3000 பேர்களின் குடும்பங்களுக்கு ஈடு செய்ய முடியாத தோல்வியல்லவா ஏற்பட்டிருக்கிறது!


★ **கணக்கியல் (O. L.; A. L.)**
**பரீட்சை வினா விடை**

★ **வர்த்தக எண்கணிதம்**
**மாதிரி வினா விடை**

★

விலை 2|50

விற்பனையாளர்:-
ஸ்ரீலங்கா புத்தகசாலை
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

சைக்கிள் களவுகள் இப்போது வர, வர மிக மோசமாகிவிட்டன. தெரு ஓரத்தில் பூட்டி வைத்துவிட்டு கடைக்குள் போய்விட்டு வந்த ஒருவரின் சைக்கிள் கூடப் பூட்டை உடைத்துக்கொண்டு பறந்து விட்டது! சாதாரண பூட்டுகளை விட்டு, வேறு பூட்டுகளை உபயோகிப்பதனால் பல களவுகளைத் தவிர்க்கலாம். பொலிசாரும் அவ்வப்போது பல களவுகளைப் பிடித்துக்கொண்டுதானிருக்கிறார்கள். 'களவுபோன சைக்கிள்களைக் கண்டு பிடித்தாலும் அதன் சொந்தக்காரர்களைக் கண்டுபிடிப்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறதே!' என்று அனுராதபுரத்தில் ஒரு பொலிஸ் அதிகாரி கூறியிருக்கிறார்.

ஒரே சத்தமாக நிரம்பிவிட்ட இந்த உலக வாழ்க்கையில் சலிப்படைந்த சிலர் 'தி சைலன்ட் மைனரிட்டி' என்ற பெயரில் இங்கிலாந்தில ஒரு கிளப்பைத் தொடங்கியிருக்கிறார்கள். இதன் உறுப்பினர்கள் மாலையில் கிளப் மண்டபத்தில் கூடுகிறார்கள். ஒருவரும் எதுவும் பேசக்கூடாது. அவசியமானால் எழுதிக் காண்பிக்கலாம். மீறினால் அபராதம் செலுத்த வேண்டும். மௌனமாக இருந்து கொண்டே மது அருந்தி மகிழ்கிறார்கள் இவர்கள்!

தமிழர் கூட்டணிப் பொதுக் கூட்டமொன்று கடந்த 9 ம் திகதி யாழ். முற்றவெளியில் நடைபெறப்போவதாக அதற்கு இரண்டொரு தினங்கள் முன்பதாக பத்திரிகைச் செய்திகள் வெளிவந்தன. 8-ந் திகதி காலையில் என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்ட ஒரு எம். பி. கூட அதை உறுதிப்படுத்தியிருந்தார். ஆனால், 'கூட்டம் நடத்துவதற்கான அனுமதி பிந்திக் கிடைத்த காரணத்தால் கூட்டதை 16-ம் திகதிக்கு ஒத்தி வைத்திருப்பதாக 9 ம் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் மட்டும் ஒரு சிறு செய்தி வெளிவந்திருந்தது. நூற்றுக்கணக்கான அனுதாபிகள்—ஈழநாடு செய்தியைப் பாராதவர்கள்—தூர இடங்களிலிருந்துகூட முற்றவெளிக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிப் போனார்கள். ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதில்கூட சரிவரச் சிந்தியாது அறிவிப்புகள் கொடுத்தது எதைக்காட்டுகிறது?—கூட்டணியின் நிர்வாகம் சிறப்பாக இல்லை!

இந்திரா காந்தியிலும் பார்க்க தமக்கு வயது அதிகம் என்பதை எம். ஜி. ஆர். ஒரு கூட்டத்தில் மறைமுகமாக வெளியிட்டிருக்கிறார். தமது அதிக



வயதை மறைக்கவேண்டியதில்லை எம். ஜி. ஆர். இந்த வயதிலும் ஒரு வாலிபன் போலச் சிறப்பாக நடித்து வருகிறாரே-அதிலே தான் அவருடைய உயர்வு வெளிப்படுகிறது!

# மண்ணுலகத்து ஓசைகள்

சென்ற வருடம் முற்பகுதியில் கொழும்பு பல்கலைக்கழகத்திலே சோஷலிஸ வெளியீடுகள் கண்காட்சி ஒன்று நடைபெற்றது, மூன்று நாட்கள் நடைபெற்ற அப்புத்தக - சஞ்சிகை - கண்காட்சியைப் பார்க்க வந்தோர் பெரும்பாலானோர், ''அஞ்ஜெலா டேவிஸை விடுதலை செய்க'' என்று கோரிய மனுப்பத்திரம் ஒன்றிலே கையொப்பமிட்டுச் சென்றனர். பல நூற்றுக்கணக்கானோர் கைச்சாத்திட்ட அக்கோரிக்கை பின்னர் அமெரிக்க தூதராலயத்தில் கொடுக்கப்பட்டது.

சில நாட்கள் கழித்து, அமெரிக்கத் தூதராலயத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் இது பற்றி பிரபல ஆங்கிலத் தினசரியொன்றுக்கு எழுதிய கடிதத்திலே, அஞ்ஜெலா டேவிஸ் என்ற அமெரிக்க நீகிரோப் பெண் அரசியல் குற்றத்துக்காக விளக்க மறியலில் வைக்கப் பட்டிருக்கவில்லை என்றும், கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு மறியலில் வைக்கப்பட்டிருக்கிறார் என்றும் பொருள்பட தனது அபிப்பிராயத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

சென்ற மாதம், அமெரிக்காவிலுள்ள கலிபோர்ணியாவில் பரபரப்பாகப் பல நாட்கள் நடந்த வழக்கு விசாரணையின் இறுதியில், முற்றிலும் வெள்ளையர்களைக் கொண்ட ஜூரர் குழு அஞ்ஜெலா நிரபராதி என்று ஏகமனதாய்த் தீர்ப்பளித்தது. கொலைக்கும் அஞ்ஜெலாவுக்கும் எத்தகைய சம்பந்தமும் இருக்கவில்லை என்பது ஜூரர்களின் துணிவு. அதன்படி அப்பெண்மணி விடுதலை செய்யப்பட்டார்.

மிகக் குறுகிய காலத்தில் உலகப் பிரசித்தி பெற்ற நபராகினார் அஞ்ஜெலா. இருபத்தெட்டு வயதே நிரம்பியுள்ள அக்கறுப்புநிற யுவதி, அமெரிக்க பெரும்பிரசார சாதனங்களின் இடைவிடாத அவதூறுகளையெல்லாம் சமாளித்து நீதியின் பக்கம் நின்று வெற்றி கண்டுள்ளார். விமானங்களைத் திசைதிருப்புவதில் பலே கைக்காரியாக விளங்கும் அராபியப் பெண் லைலா காலிட் போல, அரசியல் நம்பிக்கைகளுக்காகச் செயலில் இறங்கும் வீரதீரப் பெண்மணி அஞ்ஜெலா.

பாரிஸ் நகரிலுள்ள புகழ்பூத்த சொர்பொன் பல்கலைக்கழகத்தில் அரசியல் தத்துவ ஞானத்திலே ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி கலாநிதிப் பட்டம் பெற்ற அஞ்ஜெலா பின்னர் கலி


கலாநிதி க. கைலாசபதி

போர்ணியா பல்கலைக் கழகத்தில் ஹெர்பட் மார்க்குஸெ என்ற உலகப் பிரசித்தி வாய்ந்த பேராசிரியருக்கு உதவியாளராய் அரசியல் தத்துவம் போதித்து வந்தார். நீகிரோ மக்கள் முன்னேற்றம், பெண்கள் விடுதலை, வியத்நாம் யுத்த எதிர்ப்பு, பல்கலைக்கழகப்பாடச் சீர்திருத்தம் முதலிய பல இயக்கங்களில் முழு மூச்சாக ஈடுபட்டு வந்த அஞ்ஜெலாவைக் கொலை வழக்கில் மாட்டிவிட, ஆட்சியாளர் விரும்பினர்; முயன்றனர் எனினும் இறுதியில் நீதிதேவன் மயங்கவில்லை.



நானூற்று இருபத்தெட்டு நாட்கள் 'விளக்க' மறியலில் வைத்திருந்தபின் உலகமக்களின் அபிப்பிராயத்துக்கு அஞ்சி, இவ்வருடம் பெப்ரவரி மாதம் 23-ம் திகதி அவளைப் பிணையில் விட்டது அரசாங்கம். அதுவும் எத்தனையோ நிபந்தனைகளின்படி பிணையில் விடப்பட்டாள். ''கடத்திச் செல்லுதல், கொலை'' ஆகிய கடும் குற்றச்சாட்டுகளின் பேரில் வழக்குத் தொடரப்பட்டது. விசாரணை நடந்த மன்றத்துக்கு விசேஷமாக செய்யப்பட்ட பாதுகாப்பு ஒழுங்குகளுக்கு மாத்திரம் எழுநூறாயிரம் அமெரிக்க டொலர்கள் செலவழிக்கப்பட்டதாம். காதல் வெறியில் அஞ்ஜெலா படுகொலை புரிந்தாள் என்பது குற்றஞ்சாட்டியோரது வாதம். அஞ்ஜெலா 'படுகொலைக்காரி' என்ற கருத்தையே வாதிகள் திரும்பத் திரும்பக் கூறினர்:

விசாரணையின் போது குறுக்கு விசாரணைகளுக்கு அஞ்ஜெலா அளித்த மின்வெட்டுப் பதில்கள் நிச்சயம் பிரசித்தமடையப் போகின்றன. நிதானமிழக்காமல், தன்னம்பிக்கையுடனும், சுயமரியாதையுடனும், கண்ணியத்துடனும் கோர்ட்டில் அவள் நடந்து கொண்டதைப் பற்றிப் பல பத்திரிகையாளர்கள் பரவசப்பட்டு எழுதியிருக்கின்றனர், ''பெண்மை வென்றதம்மா'' என்று வேறு சிலர் எழுதியுள்ளனர். உண்மையில் அஞ்ஜெலாவின் கொள்கைப்பற்றும், இலட்சிய நேர்மையும் பொதுசன அபிப்பிராயமும் வெற்றி பெற்றுள்ளன என்பதில் ஐயமில்லை. இன்று அமெரிக்கா உட்பட உலகின் எத்தனையோ நாடுகளில் பல்லாயிரக்கணக்கான வாலிபர்கள் அஞ்ஜெலாவே 'இன்றைய யுகத்தின் இலட்சியப் பெண்' என்று கூறுகின்றனர். ''அமெரிக்காவின் எதிர்கால பின் அம்மையார்'' (தென் வியத்நாம் புரட்சிகர அரசாங்கப் பிரமுகர்) என்று ஓர் இளைஞன் சொன்னானாம். ●



தமிழகத்தின் சிறந்த நடிகர் சிவாஜி கணேசன் கடந்த தேர்லில் சின்டிகேட் காங்கிரசுக்காக வேலை செய்தார். வெற்றி கிட்டவில்லை. இலங்கையின் சிறந்த நடிகர் காமினி பொன்சேகா கடந்த தேர்தலில் யூ. என். பி. கட்சிக்காக உழைத்தார். அந்தக் கட்சியும் படுதோல்வி கண்டது! மா. புலேந்திரன், கொட்டடி.

அரசப் பேரவையில் சமீபத்தில் உரை நிகழ்த்திய தமிழ் உறுப்பினர்கள் எல்லாருமே தமிழ் மொழியில் பேசினார்கள். ஆனால் ஈழத் தமிழ் நாட்டின் தலைநகரான யாழ்ப்பாண நகரின் பிரதிநிதி சி.எக்ஸ். மாட்டின் ஆங்கிலத்திலேயே பேசினார். யாழ்ப்பாண நகரோடு தொடர்ச்சியாக அமைந்திருக்கும் நல்லூர்ப் பிரதிநிதி அருள்ம்பலமும் ஆங்கிலத்திலேயே பேசியிருக்கிறார். ஈழத் தமிழர்கள் எல்லாருக்குமே மானக் கேடான விஷயம் இது!

சிறுத்தை, புலித்தோல்கள் இறக்குமதி செய்வதைப் பிரிட்டன் தடை செய்திருக்கிறது. அந்நியச் செலவாணியை மிச்சம்பிடிக்கவல்ல. உலகில் புலிகளின் தொகை மிக மோசமாகக் குறைந்து வருவதைக் கணக்கிட்டிருக்கிறார்கள். 1930ம் ஆண்டில் இந்தியாவில் சுமார் 40,000 புலிகள் இருந்தன. இப்போது 2000 புலிகள் மட்டுமே மிஞ்சியிருக்கின்றன! இந்த வேகத்தில் போனால் இன்னும் சிலகாலத்துக்குப்பிறகு 'புலி' என்ற இனமே முற்றாக அழிந்துவிடும். தோல் வியாபாரத்துக்காகப் புலிகளைச் சுட்டுக் கொல்பவர் தொகையைக் குறைக்கும் நோக்கத்துடன் பிரிட்டன் புலித்தோல் இறக்குமதிக்குத் தடை விதித்திருக்கிறது. —உலக நாடுகள் அனைத்தும் பிரிட்டனின் இந்த வழியைப் பின்பற்ற வேண்டும்!

'பண்டிதர் இரத்தினம் சிறந்த அறிவாளி. பாராளுமன்றத்தில் எப்போதுமே அவர் தமிழில்தான் பேசுவார். ஆயினும் ஆங்கில மொழியையும் அவர் நன்கு பயின்றவர். அவர் நினைத்தால் சிங்கள மொழியை மிக விரைவில் கற்றுவிடுவார்' என்று பண்டிதருக்கு 'ஐஸ்' வைத்தார் கொல்வின். பண்டிதருக்கு இந்த ஐஸ் குளிரூட்டுவதற்குப் பதில் சூட்டைத்தான் ஏற்படுத்தி விட்டது. அவர் சொன்னார்: 'முதலில் நீங்கள் தமிழ் படியுங்கள். பிறகு நான் சிங்களம் படிக்கிறேன்' என்று!

# பரீட்சையில் சித்தியடைய வேண்டுமா?

— க. குகதாசன்

தற்கால வாழ்வில், உத்தியோகம் பெறுவதற்கோ அன்றேல் உத்தியோக உயர்வு பெறுவதற்கோ, பரீட்சைகளிலோ அன்றேல் போட்டிப் பரீட்சைகளிலோ திறமையாகச் சித்தியடைவது அவசியமாகின்றது. சோதனைகளில் சிலர் திறமையாகவும் சிலர் திறமையற்றும் விளங்குவதற்குக் காரணம் யாது? திறமையாகச் சித்தியடைபவர் கடைப்பிடிக்கும் 'இரகசியம்' யாது? அவரின் வெற்றியின் இரகசியம் என்ன?

## அக்கறையும் ஆவலும்

முதலில் நாம் தோற்றவிருக்கும் பரீட்சையிலோ அன்றேல் அடையவிருக்கும் பதவியிலோ அக்கறையும் ஆவலும் உடையவர்களாக இருத்தல் வேண்டும். அக்கறை என்ருல் என்ன? உள்ளத்தின் சுறுசுறுப்பே அக்கறை. உள்ளத்தின் சோம்பேறித்தனமே அசட்டை. ஆகையினுல் எம்முடன் கூடித்திரியும் அசட்டைத் தனத்தை அகற்றி, அக்கறை என்னும் உள்ளச் சுறுசுறுப்பை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும். இவ்வுள்ளச் சுறுசுறுப்பு சிலருக்கு இயற்கையாகவே அமைந்துவிடுகின்றது. நாம் இவ் உள்ளச் சுறுசுறுப்பைச் செயற்கையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## கற்பனை உலகில் சஞ்சரிக்கவும்

நீங்கள் தோற்றவிருக்கும் பரீட்சையில் சித்தியடைந்ததும் அடையவிருக்கும், பதவியின் பெருமையைக் கற்பனைக்கண் கொண்டு பாருங்கள். எவ்வளவு உயர்ந்த பதவி! உமக்குக்கீழ் எத்தனைபேர் பயபக்தியுடன் கடமையாற்றுவார்கள்! எத்தனைபேர் 'ஐயா' எனக்கூறி புத்திமதி கேட்க வருவார்கள்! நீர் அலுவலகத்தின் மத்தியிலே பல சேவையாளர்களை மேற்பார்வை செய்து கட்டளை இடுவதையும், மற்ருேர் அதை நிறைவேற்றுவதையும் கற்பனைக்கண்கொண்டு பார்க்கவும். இப்படிச் சில தினங்கள் - சில நிமிடங்கள் கற்பனை உலகில் சஞ்சரியுங்கள். உங்களை அறியாமலே உள்ளச் சுறுசுறுப்பும் ஆவலும் உற்சாகமும் ஏற்பட்டு, நன்ருகப் படிப்பதற்கு ஏற்றதோர் சூழ்நிலை உண்டாகிவிடும்.

## திட்டமிட்டுப் படித்தல் வேண்டும்

திட்டமிட்டு, கால அட்டவணை தயார்செய்து, கூடியவரை அதன் வரம்புக்கேற்பப் படித்தல் வேண்டும். நாளைக்குப் படிப்போம் நாளைக்குப் படிப்போம் என்று பின்போட்டுக்கொண்டே வந்தால், நாட்கள் பறந்துவிடும். நாட்கள் உங்களை அறியாமல் பறந்த பின்பு, சோதனைக்கு இன்னும் சில தினங்கள்மட்டுமேஇருக்கின்றது என உணருவீர்கள். நாட்கள் நெருங்கி விட்டனவே என்று பயப்படும்போது நன்ருகப் படிக்கவும்முடியாமல்—எப் பாடத்தைப் படிப்பது எனத் தீர்மானிக்கவும் முடியாமல்—படித்த சிலவற்றை நினைவில் வைத்துக்கொள்ளவும் முடியாமல் தடுமாற்றம் அடைவீர்கள். நாட்கள் நெருங்கிவிட்டனவே என்று உணர்ச்சிவசப்படுகிறவர்களுக்கு களைப்புமேலிடும். அச்சம் மிகும். ஆகவே இத்தடுமாற்றத்தையும், களைப்பையும் தவிர்ப்பதற்கு, மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே, கால அட்டவணை தயார் செய்து, பாடங்களைத் திட்டமிட்ட முறைப்படி பயின்று வருதல் வேண்டும்.

### கவனம் செலுத்துதல்

நாம் வகுப்பறையில் பாடங்களைக் கேட்கும்போதோ அன்றேல் நாம் பயிலும்போதோ, அப்பாடத்தில் நன்ருகக் கவனம் செலுத்துதல் வேண்டும். (Concentration). ''என்ஞல் நன்ருகக் கவனம் செலுத்த முடியவில்லையே'' என்று ஏங்குவோர் பலருண்டு. ஊக்கத்தின் மறுபெயரே கவனம் செலுத்துதல். நல்ல ஊக்கத்துடன் பாடங்களைக் கேட்டிடும்போதும், படித்திடும்போதும் கவனம் தாஞகவே வந்திடும். மேலும் நன்ருகக் கவனம் செலுத்துவதற்கு துணிவும் தன்னம்பிக்கையும் வேண்டும். ''நான் நன்ருகப் படிப்பேன்'' என்ற துணிவும், ''சோதனையில் திறமையாகச் சித்தியடைவேன்'' என்ற தன்னம்பிக்கையும் இருத்தல் வேண்டும். துணிவும் தன்னம்பிக்கையும் இல்லாதவர்களுக்கு அச்சம் ஏற்படும். அச்சத்தின் காரணமாகத் துன்பம் ஏற்படும். துன்பம் ஏற்படும்போது எப்படிக் கவனம் செலுத்த முடியும்? ''என்ஞல் கவனம் செலுத்த முடியவில்லையே'', ''என்ஞல் நன்ருகப் படிக்க முடியவில்லையே'' என்று ஏங்குதல் கூடாது. இப்படி ஏங்கித் தவிப்பது எம்மைப் பார்த்துக் குரைக்கும் நாயைப் போன்றது. குரைக்கும் நாயை எதிர்த்தால் அது ஓடிவிடும். ஆஞல், அதைக் கண்டு நாம் அஞ்சி ஓடிஞல் அந் நாய் எம்மைத் துரத்தும். ஆகவே 'நான் நன்ருகப் படிப்பேன்' என்ற மன வைராக்கியத்தையும், நன்ருகக் கவனம் செலுத்த வேண்டியதற்கு அவசியமான ஊக்கத்தையும் கொண்டு, குரைக்கும் நாயாகிய ஏக்கத்தை விரட்டுங்கள்!


## ஞாபகசக்தியை வளர்ப்பதெப்படி?

கற்றவற்றை நன்ருக ஞாபகம் வைத்துக்கொள்ளல் வேண்

டும். ஞாபகசக்தியை நன்ருக வளர்ப்பதற்கு, நீங்கள் படித்த வற்றை ஓய்வாக இருக்கும் போது மீட்டுப் பார்த்தல்வேண் டும். பஸ்ஸிலோ, புகைவண்டி யிலோ செல்லும்போதோ அன் றேல் ஓய்வாகஇருக்கும்போதோ, கற்றவற்றில் முக்கியமான வற்றை எண்ணுதல் வேண்டும். அவற்றைப் பொதுவிடயங்களு டன் தொடர்புகொண்டு பார்த் தல் வேண்டும். உதாரணமாக 'ஓமின்' விதியை ஞாபகம் வைத் திருப்பதற்கு, அவ் விதி கண்டு பிடிக்கப்படா விட்டால் விஞ் ஞான வளர்ச்சி எவ்வாறு தடைப் பட்டிருக்கும் எனச் சிந்தித்தல் வேண்டும். இலங்கையினதுவிஸ் தீரணத்தை ஞாபகம் வைத்துக் கொள்ள விரும்பினுல், வேருேர் நாட்டு விஸ்தீரணத்துடன், இல ங்கையினது விஸ்தீரணத்தை ஒப் பிட்டுப் பார்த்தல்வேண்டும். இலங்கையினது விஸ்தீரணம் இங்கிலாந்துடன் ஒப்பிடும்போது எவ்வளவு? இலங்கையளவு விஸ் தீரண அளவுடைய வேறு ஏதா வது நாடுண்டா? இந்தியாவி லுள்ள தமிழ் நாட்டிலும் பார்க்க இலங்கை பெரியதா சிறியதா? தமிழ் நாட்டினது விஸ்தீரணம் சுமார் 50,000 சதுர மைல்கள். இலங்கையினது விஸ்தீரணம் சுமார் 25,000 சதுர மைல்கள். ஆகவே இலங்கையி னது விஸ்தீரணம் தமிழ்நாட்டை விட அரைவாசியாகும். மேலும் எனது வயதுடன் (25) மூன்று வட்டங்களைக் (000) கூடப் போட் டால் வரும் சதுர மைலே இலங்கையினது விஸ்தீரணம் ஆகும். இவ்வாறு நாம் கற்ற வற்றை ஒப்புநோக்கி, சீர்தூக்கி, சிந்தித்து பொதுவிடயங்களுடன் தொடர்புகொண்டு பார்க்கும் போது அவை எம்மனதில் நன் ருகப் படிந்துவிடும்.

## குறைந்து செல்லும் எல்லை விதி

நீங்கள் தொடர்ந்து நான்கு மணித்தியாலங்கள் படிக்கப் போகின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்படி நான்கு மணித்தியாலங்கள் தொடர்ந்து படிக்கும்போது, ஒரே பாடத்



இக்கட்டுரை ஆசிரியர் க. குக தாசன், வெள்ளி வாசகர்க ளுக்குப் புதியவரல்லர். சிறந்த அறிவுக்கட்டுரைகளை எழுதி வரும் இவர், அஞ்சல் தொலை தொடர்புச் சேவையாளர் சங் கத்தின் சஞ்சிகையான 'போஸ்ட் மாக்'கின் ஆசிரியர். அஞ்சல் திணைக்களத் தேர்வு க்கு உதவக் கூடியதாக 'பரீ ட்சை வழிகாட்டி' என்ற நூலை சமீபத்தில் எழுதியிருக் கிருர். தமிழில் இது புது முயற்சி.

தைத் தொடர்ந்து படிக்கக் கூடாது. முதல் மணித்தியாலம் ஒரு பாடத்திற்கும், இரண்டாவது மணித்தியாலம் வேஞெரு பாடத்தில் குறிப்பெழுதுவதற்கும், மூன்ருவது மணித்தியாலம் படித்த பாடமொன்றினை மீட்டுப் படிப்பதற்கும், நான்காவது மணித்தியாலம் ஒரு வினுவுக்கு விடை எழுதிப் பழகுதற்கும், இப்படியாக வெவ்வேறு வகையாகப் படித்தல் வேண்டும். தொடர்ந்து ஒரே பாடத்தை ஒரேவகையில் படித்தால் பொருளாதாரத்தில் வரும் ''குறைந்து செல்லும் எல்லை விதியே'' இங்கும் பொருந்தும்.

## சோதனைப் பயம்

சிலர் எவ்வளவு திறமைசாலிகளாகவிருந்தாலும், சோதனை மண்டபத்தில்''சோதனைப்பயம்'' ஏற்பட்டு கற்றவை நன்ருக ஞாபகம் வராமலோ, அன்றேல் ஞாபகம் வந்தவற்றைச் செம்மையாக எழுத முடியாமலோ கோட்டை விட்டுவிடுவார்கள். சோதனைப் பயம் ஏற்படாமல் இருப்பதற்கு ஒரேயொரு வழியேயுண்டு. வீட்டில் வினுக்களுக்கு விடை எழுதும் போது ''சோதனை நிலைமையில்'' (Under Examination Conditions) தொடர்ந்து மூன்று மணித்தியாலங்களுக்கு விடை எழுதிப் பழகுதல் வேண்டும். அப்படி எழுதும் போது, தான் உண்மையாக சோதனை மண்டபத்தில் வீற்றிருப்பதுபோலக் கற்பனை செய்து, வீட்டில் விடை எழுதுவது போலவே சோதனை மண்டபத்தில் துணிவுடன் மனநம்பிக்கையுடன், வெற்றி மனப்பான்மையுடன் எழுதுவேன் என்று மன உறுதி பூணல்வேண்டும். இப்படி ஐந்தாறு தடவைகள் செய்து வந்தால் 'சோதனைப்பயம்' நாளடைவில் உங்களிடமிருந்து முற்ருக விடைபெற்றுவிடும்.

## வெற்றி மனப்பான்மை

முடிவாக, நீங்கள் சோதனையில் சித்தியடைவீர்கள் என்ற வெற்றி மனப்பான்மையுடன் சோதனைக்குத் தயார் செய்திடல் வேண்டும். ''நான் சோதனையில் திறமையாகச் சித்தியடைவேன்'' என்ற மனநம்பிக்கையுடனும், வெற்றி மனப்பான்மையுடனும் உறுதியுடனும் உற்சாகத்துடனும் படிப்பவனே இன்ருே அன்ருேல் என்ருே பரீட்சைகளில் திறமையாகச் சித்தியடைவான். 'எனது திறமையை இச்சோதனை மூலம் உலகறியச் செய்யப்போகின்றேன்' என்ற மனவைராக்கியத்துடன் எச்சோதனையிலும் தோற்றுங்கள்! திறமையும் பெருமையும் என்றென்றும் உங்களுடன் கூடிக்குலாவுவர்!

---

மாலா சின்ஹா படங்களில் நடிப்பது அவரின் கணவருக்கு விருப்பமில்லை. இதைவெளிப்படையாகவே சொன்னுர் அவர். அதற்கு மலா சின்ஹா ''உங்கள் மகிழ்ச்சிக்காக நான் நடிப்பதை விட்டுவிடலாம்; அதுவே என்னை மகிழ்ச்சியற்றவளாக்கிவிடுமே!'' என்ருராம்! — மாலாசின்ஹா மட்டுமல்ல எல்லா நடிகைகளுமே இப்படித்தான் சொல்வார்கள். ஏன், மனைவி உத்தியோகம் பார்ப்பது கணவனுக்குப் பிடிக்கவில்லையென்பதற்காக எத்தனை பெண்கள் உத்தியோகத்தை விட்டுவிடத் தயாராயிருக்கிருர்கள்?



இந்திராகாந்தியும், பூட்டோவும் சிம்லாவில் சந்தித்து ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். 'இரண்டு நாடுகளுக்குமிடையே உள்ள பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்த்துக் கொள்வோம். எக்காரணத்துக்காகவும் சண்டை தொடங்குவதில்லை' என்பதே ஒப்பந்தம். எல்லா நாடுகளும் இதை மிகவும் வரவேற்றிருக்கின்றன. 'நீதான் ஒப்பந்தத்தை முதலில் மீறினாய்' என்று இந்த இரு நாடுகளும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுகிற காலம் வராமலிருக்க வேண்டுமே!

துப்புத் துலக்குவதற்காக பொலிஸில் நாய்களை வைத்திருக்கிறார்களல்லவா? நாய்களுக்கு மோப்ப சக்தி மிகவும் அதிகம். மனிதனைவிட அல்சேஷியன் நாய்கள் சுமார் 45 மடங்கு மோப்ப சக்தி உடையன!

''அழிவின் அறியாமையே! அழிவின் பரிணாம வளர்ச்சிச் சின்னங்களாய், நடமாடும் என் சோதரரைப் பற்றிய பாடல்களை..., காலத்தின் மீது சுவடு பதிக்கும்; அழியாக் கவிதைகளைக் கருத்தாக்கும் இந்த, கர்ப்ப காலத்தில் உன்னை நான் வரவேற்கத் தயாராக இல்லை''— இது ஒரு கவிதை. 'சொலிற்'றாக அடுக்கியிருக்கும் இந்த வரிகளை ஏழு வரிகளாய்ப் பகிர்ந்து அச்சிட்டிருக்கிறார்கள். 'வானம் பாடி' என்ற கவிதைச் சஞ்சிகையில் 'புவியரசு' எழுதியிருக்கிறார். டெமி 1/8 அளவில் 16 பக்கங்கள் உள்ள ''வானம்பாடி'' சஞ்சிகை முழுவதும் அநேகமாக இந்தகைய கவிதைகளே! அச்சும் அமைப்பும் நன்றாக இருக்கின்றன. ஆயினும் எதுகை மோனை இல்லாமல் இப்படி வசனமாகவே இருக்கும் கவிதைகளை என்னால் ரசிக்க முடியவில்லை. ஒரு வேளை அதற்கும் ஒரு 'பக்குவம்' தேவைப்படக் கூடும்! 'மானுடம் பாடும் வானம் பாடிகளின் விலையிலாக் கவிமடல்,' வெளியீடு: மலர்விழி அச்சகம், வெறைட்டி ஹால் ரோடு, கோவை—1.

ஐஸ் சாப்பிடுவதனால் பற்களுக்கே பெருந்தீங்கு ஏற்படுறது. குளிர்ப்பிரதேசங்களைவிட, உஷ்ணப் பிரதேசங்களில் இந்தப் பாதிப்பு அதிகம். சிறுவர்களுக்கு ஐஸ் வாங்கிக் கொடுக்கும் பெற்றோர், மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

▮ சிவாஜி கணேசன் படங்களில் நடிக்கும்போது சௌந்தரராசன் இரவல் குரல் கொடுக்கிருர். ஆனுல் சிவாஜி சொந்குரலிலும் நன்ருகப் பாடக்கூடியவரே. புகழ் பெற்ற 'தங்கப் பதக்கம்' என்ற நாடகத்தில் சிவாஜி தமது சொந்தக் குரலிலேயே பாடி நடித்து வருகிருர்.

▮ 'சினிமாஸ்கோப்' முறையில் பெரிய அளவில் தத்ரூபமாகப் படங்களைத் தயாரிப்பது போல 'டிராமாஸ்கோப்' என்ற ஒரு புதிய முறையில் மனேகர் ஒரு புதிய நாடகத்தைத் தயாரிக்கிருர். 'விஸ்வாமித்திரர்' என்ற இந்த நாடகம் மிக விரைவில் அரங்கேற இருக்கிறது. அடுத்த ஆண்டில் இந்த நாடகத்தையும் தமது வெற்றி நாடகங்கள் சிலவற்றையும் 'டிராமாஸ்கோப்' முறையில் நடத்திக் காண்பிப்பதற்காக சிங்கப்பூர், மலேசியா செல்லவும் திட்டமிட்டிருக்கிருர். முந்திய காலமாயிருந்தால் இந்த நாடகக்குழு இலங்கைக்கும் கண்டிப்பாக வந்திருக்கும். இப்போதுதான் காலம் மாறிவிட்டதே!

▮ களைத்துப் போயிருக்கும் போது சிறிது மது அருந்திஞல் நல்லதென்று பலர் நினைக்கிருர்கள். இது தவருன எண்ணம். மது களைப்பைப் போக்குவதில்லை. சிறிதுநேரம் அறிவை மயக்கி களைப்புத் தெரியாமலிருக்கச் செய்கிறது. இதனுல் உடம்புக்குத் தீமையே தவிர நன்மையில்லை.

▮ பெண்களைவிட ஆண்களுக்குத் தசைப்பலம் அதிகம். ஆனுல் ஒரே ஒரு உறுப்பில் மட்டும் ஆணைவிடப் பெண்ணிற்குத் தசைப்பலம் அதிகம்—அது அவளுடைய நாக்குத்தான்!

▮ பாகிஸ்தான் அதிபர் பூட்டோவுக்கு ஒரு மகள் இருக்கிருள். பெனுசிஸ் என்று பெயர். பதினெட்டே வயதான இந்த அழகி, அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்றில் அரசியல் விஞ்ஞானப் பட்டப் படிப்புப் பெற்றவர். இந்திராகாந்தியைச் சந்திக்க பூட்டோ சிம்லாவுக்குப் போயிருந்தபோது பெனுசிசும் போயிருந்தார். சிறந்த அழகியான இவரைப் படப்பிடிப்பாளர்கள் மொய்த்துக்கொண்டனர். பத்திரிகை நிருபர்கள் பேட்டி கேட்டனர்: 'அதற்கெல்லாம் அப்பாவின் அனுமதி பெறவேண்டும். அவர் இப்போது 'பிஸி'யாக இருக்கிருர்' என்று சொல்லிவிட்டார் பெனுசிஸ். அரசியல் படித்தவரல்லவா?


**வெள்ளி** விற்பனையாளர்

**இறக்குவானை**

நவா புத்தகசாலை
180-ஏ, பிரதான வீதி.

**தெல்தோட்டை**

எம். எஸ். மணி
36, பிரதான வீதி.

**வாழைச்சேனை**

எம். எம். ஜமால்தீன்
தைக்காவீதி.

# நளினியின் நாயகன்

## வரதர்

**சென்ற இதழில்:** நள்ளிரவு 12மணி. படுக்கையில் நித்திரையில் லாமல் புரண்டுகொண்டிருக்கிறாள் நளினி. திருமணமாகிச் சில மாதங்களே ஆகியிருந்த அவளுடைய கணவன் வேலாயுதம் ஏதோ அலுவலாக அன்று மாலைதான் யாழ்ப்பாணம் போயிருக்கிறான். அவன் ஒரு ஆஸ்த்மா நோயாளி. வாழ்க்கையை ரசித்து அனுபவிப் பவனுமல்லன். சூது விளையாட்டுக்குத் தன்னைப்பலிகொடுத்தவன்.

தன்னுடைய அலுமாரிக்குள்ளே புடைவைகளுக்கு அடியில் மறைத்துவைத்திருக்கும் கடிதத்தைச் சுற்றி நளினியின் எண்ணங் கள் படருகின்றன. அது சுந்தரம் எழுதிய கடிதம். காதற்கடித மல்ல. ஆயினும் அந்தக் கடிதத்தின் நினைப்பில் அவளுக்கு ஒரு இன் பம். திருமணமான ஒரு பெண் அப்படி ஒரு கடிதத்தை வைத்திருப் பது தவறு என்பதை உணர்ந்த போதிலும், அதைக் கிழித்தெறி யாமல் வைத்திருக்கிறாள் நளினி. அதைச்சுந்தரத்திடமே திருப்பிக் கொடுத்து விடுவதென்றும் தீர்மானித்திருக்கிறாள். அந்தக் கடிதத்தை எடுத்து வைத்துத் திரும்பவும் படிக்கிறாள். அவளுக்கும் சுந்தரத் துக்கும் திருமணப்பேச்சு நடந்த போது எழுதப்பட்ட கடிதம் அது. அவனுடைய குடும்பச் சிறப்பு உத்தியோகம் முதலியவைகளை நளி னியின் தகப்பனார், சின்னத்தம்பி எம். பி., விரும்பிய போதிலும் அவன் ஒரு 'கம்யூனிஸ்ட்' என்பதால் தமது மகளை அவனுக்குக் கொடுக்க விரும்பவில்லை. இதனைக் குறிப்பிட்டுக்காட்டி, 'அவர் அப்படியிருந்தாலும் நீங்கள் முற்போக்குக் கருத்துக்களை வளர்த்துக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்' என்று கடிதத்தை முடித்திருந் தான் அவன்.

காலையில் வேலைக்காரப்பையன் மணியன் வந்து கதவைத் தட்டி, நளினியின் தகப்பனார் வந்திருப்பதை அறிவிக்கிறான். அவ ருடைய வரவு நளினியின் மனதுக்கு ஆறுதலைத்தருகிறது. எழுந்து வந்து அவரை விசாரிக்கிறாள். நளினியின் கணவன் வேலாயுதம் ஏதோ காசு மாறுகிற விஷயமாக யாழ்ப்பாணம் போயிருப்பதை அறிந்ததும், 'உங்களுக்கு அப்படி என்ன செலவு?' என்று சின்னத் தம்பி கேட்கிறார். தன்னையும் சேர்த்துத் தகப்பனார் குற்றஞ்சாட் டியது நளினிக்குப் பிடிக்கவில்லை, 'அதெல்லாம் பிறகு கதைக்கலா மப்பா, நீங்கள் முதலிலை 'பாத்றூ'முக்குப்போய் குளித்துவிட்டு வாருங்கோ' என்று சொல்லி விட்டு நளினி எழும்ப, சின்னத்தம் பியும் எழுந்து உள்ளே போகிறார்.

'எனக்கு அங்கையிருக்கப் பிடிக்கயில்லை. இருந்தாப்போலை வெளிக்கிட்டு வந்துவிட்டடன்—' என்று சின்னத்தம்பி சொன்னதை நளினி நினைத்துப்பார்க்கிறுள். 'பாவம், அப்பா' என்று அவருக்காக அனுதாபப்படுகிறுள். 'பத்து வருஷமாக 'எம்.பி'யாக இருந்தவர்;இந்த முறை எப்படிப் பட்ட பெரிய தோல்வி!

1970 மே மாதம் 27ம் திகதி இலங்கையில் ஒரு மௌனப் புரட்சியே நடந்து விட்டது. அன்று நடந்த பொதுத் தேர்தலில், இடது சாரிக் கட்சிகளே ஆச்சரியப்படுமளவுக்கு மக்கள் அவர்களுக்குத் தங்கள் ஆதரவை அளித்திருந்தார்கள்.

இடதுசாரிகளோடு சேர்ந்து கூட்டு முன்னணி அமைத்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் தமிழர்களுக்கு மாருகச் செய்த பிரசாரததின் விளைவு தான் இந்த மகத்தான வெற்றி என்று சிலர் சொல்லிக் கொண்டாாகள். ஆனுல் கூட்டு முன்னணியினர் அதிகாரத்துக்கு வந்தவுடன், தமிழ் மக்களிடையே அவர்கள் சார்பில் ஒரு பிரதிநிதிகூடத் தெரிவு செய்யப்படாத நிலையிலும் கூட, தமிழ் மக்கள் திருப்தியடையும் வண்ணம் சில காரியங்களைச் செய்தார்கள்.

திடமான அரசியல் கொள்கை எதுவுமற்ற சுயேச்சைவாதியான சின்னத்தம்பி இந்தத் தேர்தலில் தமிழரசுக்கட்சி வேட்பாளரிடம் தோற்றுப்போனுர். அரசியல் சூழ்நிலையைக் கவனித்தபோது, தனிப்பட்ட செல்வாக்கினுல் வெற்றிபெற்று வந்த தமக்கு, அரசியலில் இனிமேல் இடமிருக்கா தென்பதை அவரே உணர்ந்து கொண்டார். வீட்டை விட்டு வெளியே போனுல் எல்லாரும் தம்மையே கேலியாகப் பார்ப்பது போலவும், பேசுவது போலவும் தோன்றிற்று.

யாழ்ப்பாணத்திலேயே கொஞ்சக்காலம் தலை காட்டாமல் எங்கேயாவது போய்விட வேண்டுமென்று சின்னத்தம்பி தீர்மானித்தபோது, கொழும்பிலே தமது மகள் நளினியுடன் போயிருக்கலாமென்ற எண்ணந் தான் முதலில் தோன்றிற்று. ஆனுல் அடுத்த நிமிஷமே அந்த எண்ணத்தை விட்டு விட்டார். கொழும்பும் ஒரு 'சின்ன யாழ்ப்பாணந்தானே, அங்கே போவதால் அவருடைய பிரச்சினை தீர்ந்துவிடாது. அல்லாமலும், அவருடைய மருமகன் வேலாயுதத்தின் போக்கு அவருக்குப் பிடித்ததாயிருக்கவில்லை.

வேலாயுதம் நல்ல குடும்பத்தில் பிறந்தவன், நல்ல உத்தியோகத்தில் இருக்கிறுன் என்று நினைத்துத்தான் நளினியை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தார் சின்னத்தம்பி. ஆனுல் அவன் இவ்வளவு மோசமான ஆளாக இருப்பானென்று அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஏற்கெனவே அவன் ஒரு சூது விளையாட்டுக்காரன் என்பதைத் திருமணம் நடந்த பிறகுதான் அவர் அறிந்தார். வீட்டுச் செலவுக்கே சரிவரப்பணம் வைத்திராமல், எடுக்கிற சம்பளத்தைச் சூதில் தொலைத்துவிடுகிறுனும். ரொக்கமாகக் கொடுத்த சீதனப் பணம்

பத்தாயிரத்தில், ஏதேதோ சாட்டுச் சொல்லி, இந்த நாலுமாதங்களுக்குகிடையில் இரண்டாயிரம் ரூபாவை வாங்கிக் கரைத்துவிட்டான். நளினியின் சில நகைகளும் கூட அடைவுகடைக்குப் போய்விட்டதாகச் சின்னத்தம்பி கேள்விப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், நளினிமீது அவர் இரக்கம் கொண்ட போதிலும், வேலாயுதம் இருக்கிற வீட்டில் போயிருக்க அவர் விரும்பவில்லை. கடைசியில், இரண்டு மூன்று மாதங்கள் இந்தியாவில் போய்த்தங்கி, ராமேசுரம் முதல் காசிவரை யாத்திரை போய்வரலாமென்று தீர்மானித்து, 'பாஸ்போட்'டுக்கு விண்ணப்பித்திருந்தார். ஒரு வாரமாகியும் பாஸ்போட் அவருக்கு வந்து சேரவில்லை; முந்திய ஆளாயிருந்தால் மூன்றும் நாளே அவர் கையில் பாஸ்போட் வந்திருக்கும் —காலம் மாறிவிட்டதே!

அரசியல் காரணங்களுக்காகச் சிலருடைய பாஸ்போட்டுகளை நிறுத்தி வைத்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருந்தது. ஒருவேளை தமக்கும் பாஸ்போட் தர மறுத்துவிடக்கூடுமோ என்ற பயம் சின்னத்தம்பிக்கு ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை. கொழும்புக்குப் போனால் யாரையாவது பிடித்து பாஸ்போட்டை வாங்கி விடலாம் என்ற எண்ணத்துடன் தான் இப்போது கொழும்புக்கு வந்திருக்கிறார்.

சின்னத்தம்பி குளியலறையிலிருந்து வெளிவருவதைக் கண்டதும், ''அப்பா, நீங்கள் உடுப்பை மாற்றிக் கொண்டு 'ஈசிச்சே'ரில் கொஞ்சம்ஆறியிருங்கோ; நான் முகத்தைக் கழுவிக்கொண்டு ஓடியாறன். தோசை சுடப்போறன். சாப்பிட்ட பிறகு கொஞ்சம் படுத்து 'றெஸ்ற்' எடுக்கலாம். இராமுழுக்க ரயிலில் சரியாக நித்திரையும் கொண்டிருக்க மாட்டியள்'' என்று சொல்லிவிட்டு, குளியலறைப்பக்கம் போகிறாள் நளினி.

சின்னத்தம்பி அறைக்குள்ளேபோய், அங்கிருந்த முருகன் படத்துக்கு முன்னால் கையைக் கூப்பி, கண்களைமூடி ஒரு நிமிஷம் நின்று விட்டு, பக்கத்திலிருந்த விபூதியை மூன்று விரல்



'சுவிட்சர்லாந்தைவிட காஷ்மீர் அற்புதமான இடம்!', என்று புகழ்ந்திருக்கிறார் சிவாஜி. சமீபத்தில் படப்பிடிப்புக்காக காஷ்மீர் போன சிவாஜியை காஷ்மீர் முதல்வரே உபசரித்து பாராட்டியிருக்கிறார். சிவாஜியும் பதிலுக்கு 25 ஆயிரம் ரூபா கல்வி நிதிக்கென்று கொடுத்திருக்கிறார். படிக்காத மேதைக்குத்தான் படிப்பின் அருமை தெரிகிறது!

நுனியால் தொட்டு நெற்றியில் தடவுகிறார். பிறகு தமது பெட்டியைத்திறந்து, ஒரு வேட்டியையும் சேட்டையும் எடுத்து அணிந்துகொண்டு, நளினி சொன்னதுபோல ஈசிச் சேரில் போய் சரிகிறார். ஆனால், திரும்பிச் சுவரிலிருந்த மணிக்கூட்டைப்பார்த்தவர் 'ஓ, மணி ஏழே காலாகிவிட்டது. சண்முகத்துடன் இப்போதே கதைத்துவிட்டால்தான் நல்லது. இன்னும் கொஞ்சம் சென்றால் ஓஃபீசுக்கு வெளிக்கிட்டாலும் வெளிக்கிட்டிடுவார்' என்று நினைத்தவராய் எழும்பி தொலைபேசி இருந்த இடத்துக்குப் போய் றிசீவரைக் கையிலெடுத்துக் கொண்டு இலக்கங்களைச் சுழற்றுகிறார்.

''ஹலோ... வணக்கம்...... நான்தான் சின்னத்தம்பி பேசுறன்... இப்ப, காலமைதான் வந்தனான். ஒரு விசேஷமுமில்லை. சும்மா இருந்தாப்போலை வெளிக்கிட்டுவிட்டன்... அதிருக்க, ஒரு சின்ன அலுவல்... இந்தியாவுக்கு ஒருக்கா யாத்திரை போய் வருவமெண்டு பாஸ்போட்டுக்கு 'அப்ளை' பண்ணினனான். பத்து நாளைக்கு மேலையாப் போச்சு, ஒரு மறுமொழியையும் காணேல்லை. நீங்கள் ஒருக்கா அந்த சப்ஜெக்ட் கிளாக்கைப்பிடித்து, இண்டைக்கே ஒருக்கா முடிச்சுக் கொண்டு வந்து தரவேணும். நான் பின்னேரம் உங்கடை வீட்டை வாறன்...''

மறு பக்கத்திலிருந்து வந்த பதில் அவ்வளவு உற்சாகமானதாயிருக்கவில்லை.

''...இப்ப முந்தினமாதிரியில்லைப்பாருங்கோ... அதுவும் நாங்கள் யூ. என். பி. ஆட்களெண்டு அவங்களெல்லாருக்கும் தெரியும். சும்மா செய்யிறதையும் எங்கடை தலையைக்கண்டாச் செய்யாங்கள்... ஒரு ஆள் இருக்கிறான்... அவனைப்பிடிச்சாச் செய்விக்கலாம்,... ஓமோம்... எங்கடை சுப்பிரமணியத்தாருடைய மேன் ...ஓம்...சுந்தரம்... ஓம், கம்யூனிஸ்ட் சுந்தரந்தான்... அவனுக்கு இப்ப இங்கை எல்லா இடத்திலேயும் நல்ல செல்வாக்கு...''

''சைச் சைச் சய்!... அவனிட்டைப்போய்க் கேட்கவோ? உங்களுக்குத் தெரியுந்தானே... பிறகும்...''

''அரசியலுக்கும் இதுக்குமென்ன பாருங்கோ...அவனுக்கு இது ஒரு சின்னவேலை... அவனுடைய கட்சி எப்பிடியிருந்தாலும் ஆள் தங்கப்பவுண். . . சரி; அவன் ஒண்டும் நினைக்க மாட்டான். . . எனக்கு நல்லாய்த் தெரியும். . . . அவனிட்டைச் சொல்லிக் காரியத்தை இண்டைக்கே முடிப்பிக்கிறன். . . ஏன், நீங்களும் ஒருக்கா அவனுடைய ஓஃபீசுக்கு டெலிபோன் பண்ணிச் சொல்லி விடுங்கோவன். ஓமோம். இமிக்கிறேசன் ஓஃபீஸ்தான். இல்லாட்டி நான் ஏன் அவனுடைய பேரைச் சொல்லுறன்?. . . அவன் எங்கையெண்டு உதவி செய்வான். . .''

**கா**லை பத்துமணியிருக்கும். தகப்பனார் படுத்துத்தூங்குகிறாரென்று நினைத்துக் கொண்டு, குசினியில் ஏதோ வேலையாயிருந்த நளினி, அவர் 'ஹலோ ஹலோ' என்று யாருடனோ தொலைபேசியில் பேசுகிறசத்தம் கேட்டுக் காதைக் கொடுக்கிறாள்.

''. . . சுந்தரமா? . . . நான் சின்னத்தம்பி . . . என்னைத் தெரியுதா தம்பி. . . . ஓமோம். ஆனுல் 'எக்ஸ் எம். பி!' . . . .''

சுந்தரம் என்ற பெயரைக் கேட்டதும் நளினி வெளியே ஓடிவந்து, அவர் பேசுவதை உற்றுக் கேட்கிருள்.

சின்னத்தம்பி பேசுகிருர்:

''சண்முகம் சொன்ஞரா? . . . . நல்லது. . . இண்டைக்கே எடுத்து விட்டால் பெரிய உதவியாயிருக்கும். . . உமக்கேன் சிரமம் தம்பி? . . மிஸ்டர் சண்முகத்திட்டை குடுத்து விட்டால் நான் வாங்கிக் கொள்ளுவன். . தாங்யூ . . . .''

றிசீவரை வைத்துவிட்டுத் திரும்பியதும், எதிரே கதவடியில் நளினி நிற்பதைப் பார்க்கிருர் சின்னத்தம்பி. அவள் கேட்டதற்குமுன்பாகவே, ''பாஸ்போட்டைஎடுத்துத்தாறத்துக்கு, எங்கடை சுப்பிரமணியத்தினுடைய மேன் சுந்தரம் அந்த ஒஃபிசிலைதான் வேலை செய்கிறவனெண்டு காலைமை சண்முகம் சொன்னவர். அதுதான் சொல்லிவிட்டஞன்'' என்கிருர். தான் இந்தியா போகத்தீர்மானித்திருப்பதைப்பற்றி தோசை சாப்பிடும் போதே நளினியிடம் சொல்லியிருந்தார்.

முதலில் தொலைபேசியில் 'சுந்தரமா?' என்று அவர் கேட்பது காதில் விழுந்ததும் ஒரு ஆவலுடன் ஓடிவந்த நளினிக்கு அது நிச்சயமாக அவனேதான் என்று தெரிந்ததும் மனதுக்குள்ளே ஒரு பரபரப்பு ஏற்படுகிறது. அவனைப்பற்றி இவளிடம் குறிப்பிட்டுப் பேசவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதில் சின்னத்தம்பிக்கும் என்னவோமாதிரியிருக்கிறது. 'அதனுலென்ன, ஒரு பெண்ணுக்கு எத்தனை மாப்பிள்ளைமாரைப் பேசுகிருர்கள். உலக வழக்கந்தானே?' என்று தன் மனத்தைத் தானே சமாதானம் செய்து கொள்கிருர்.

நளினியும் தனது மனப்பரபரப்பை வெளியில் காட்டிக் கொள்ளாமல், சற்றுத்துணிச்சலுடன், ''அந்தச் சுந்தரத்துக்கும் உங்களுக்கும் பிடிக்காதெல்லோ அப்பா?, . . . .'' என்று கேட்கிருள்.

''பிடிக்கேல்லையெண்டு என்ன நளினி? அதெல்லாம் அரசியல் கொள்கை வித்தியா



கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் 'குறத்தி மக'னில் காமராஜ் படத்தைக் காட்டுகிருர்கள். தி. மு. க. வின் எதிரியான காமராஜ் படத்தைத் திரையில் காட்டியது பெரிய எதிர்ப்பைக் கிளப்பிவிட்டிருக்கிறது. இந்தமாதிரிக் காரியங்களுக்கெல்லாம் எதிர்ப்புத் தெரிவிப்பது நாகரிகமான செய்கை அல்ல.

சங்கள். அவன்ஒரு 'கம்யூனிஸ்ட்' எண்டதாலே ஆள் கொஞ்சம் முரட்டுத்தனமான ஆளாயிருப்பானெண்டு நினைச்சிருந்தன். அவன் பேசினதுகள் எழுதினதுகளைப் பார்க்கேக்கை அப்பிடித் தானிருந்தது. அவனிட்டைப் போய், ஒரு சின்ன காரியமெண்டாலும், உதவி கேக்கவும் விருப்பமில்லாமல் இருந்தனான். ஆனா சண்முகந்தான் வற்புறுத்திச் சொன்னார், '. . .மிச்சம் நல்ல பொடியன், நீங்கள் ஒருக்கா போனிலே சொல்லி விடுங்கோ' எண்டு... பார்த்தா ஆள் நல்ல குணசாலி போலேதானிருக்கு. தன்னாலே முடிஞ்சமட்டிலே எல்லாம் செய்யிறனெண்டும், பாஸ் போட்டை எடுத்திட்டா தானே பின்னேரம் இங்கை கொண்டு வந்து தாறனெண்டும் சொல்லியிருக்கிறான். .. ஒரு வேளை தூக்கியெறிஞ்சு பேசிப்போடுவானோ எண்டு பயந்து கொண்டுதான் போனை எடுத்தனான்...... சய், மிச்சம் பெருந்தன்மையான பொடியன்... எனக்கு முந்தித் தெரியாமல் போச்சு...''

சின்னத்தம்பி எதையோ நினைத்துப் பெருமூச்சு விடுகிறார். பிறகு, ''சரி நான் கொஞ்ச நேரம் படுத்துக் கண்ணை மூடிப் பார்ப்பம்'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே போகிறார்.

தகப்பனார் எதை நினைத்துப் பெருமூச்சு விட்டார் என்பது நளினிக்குத் தெரிகிறது. அவர் மீது அவளுக்கு இனம் தெரியாத ஆத்திரம் வருகிறது 'கண்போன பிறகு, முன்பே சூரிய நமஸ்காரம் செய்யாமல் போனேனே, என்று நினைக்கிறார் இவர்!' என்று நினைத்துக்கொண்டு குசினிக்குள் போனவள் ''டேய் மணியா, என்னடா செய்யிறாய்?'' என்று வேலைக்காரப் பையன்மீது தன் மனத்தில் பொங்கிய ஆத்திரத்தைக்கொட்டுகிறாள். உடனேயே தன்னுடைய பிழையைஉணர்ந்தவளாக, 'டேய்...' என்றுதொடங்குகிறாள். அந்த 'டே'யில் கனிவு குழைகிறது, ''...டே, நீ பத்து மணிக்கெல்லாம் ஒருக்கா கோப்பி குடிக்கிறனியெல்லே, உனக்கும் எடுத்துக்கொண்டு, எனக்கும் கொஞ்சம் கலந்து தா ..... பால் ஆறிப்போனா சுட விடு......'' என்று சொல்கிறாள்.

அவள் வாய் பேசிக்கொண்டிருக்கிறதே தவிர, மனம் பின்னேரத்துக்கு ஓடிப்போய் அலைகிறது, 'பின்னேரம் சுந்தரம் வந்தாலும் வருவாராமே... நான் அவருடன் கதைக்கலாமோ?... அப்பா இருப்பார். நான் அவருடன் கதைப்பது அப்பாவுக்குப் பிடிக்காமலிருக்கக் கூடும். பாஸ்போட்டை வாங்கிக் கொண்டு அவரை வாசலில் வைத்தே சும்மா ஒரு 'தாங்' ஸோடு திருப்பி அனுப்பி விடுவாரோ?... சய், நான் சும்மா பயப்படுகிறேன். வீட்டுக்கு வந்தவருடன் நான் கதைத்தால் அப்பாவுக்கு என்ன? அவருடைய அலுவலாகத்தானே வருகிறார்! பலகாரம், பிஸ்கட் ஏதாவது வாங்கி வைத்திருப்போமா... வேண்டாம்; அப்படியெல்லாம் செய்தால் ஏதோ ஸ்பெஷலாகக் கவனிக்கிறதாக அப்பா நினைப்பார்... கோப்பியை மட்

டும் குடும்பம்... அவர் கோப்பி குடிப்பாரோ, டீ குடிப்பாரோ? பின்னேரம் கொஞ்சம் கவன மாக இருக்கவேணும், ஒருவேளை அப்பா வாசலில் வைத்தே கதை த்து அனுப்பப் பார்த்தால், நான்போய் 'உள்ளே வாருங்கள்' என்று கூப்பிடவேணும். '

சுந்தரம் வீட்டுக்குள்ளே வருவதைக் கற்பனை செய்ததும் நளினிக்கு 'அந்த'க் கடிதத்தின் நினைவு வருகிறது.

'அதை அவரிடம் கொடுக்க வேணுமே!.. எப்படிக் கொடுக்கி றது?.. கொடுக்காமலே வைத்தி ருந்து விடலாமா? என்னவோ என்னுடைய பெரிய சொத்தைக் கைவிடுகிற மாதிரி இருக்கிறதே! சைச் சை, கொடுக்கத்தான் வேணும்.... அப்பா இருப்பார். பார்ப்போம். எடுத்து 'றெடி'யா பிளவுசுக்குள்ளை வைத்திருப்பம். 'சான்ஸ்' கிடைத்தால் கொடுத் துவிடலாம். அவருடன் என்ன கதைப்பது? அப்பா இல்லாவிட் டால் எப்படியும் கதைக்கலாம். அப்பா இருப்பதனுல் அவருக் கும் என்னுடன் கதைக்க ஒரு மாதிரியாயிருக்கும் . . .'

''இந்தாங்கோம்மா!'' என்ற மணியனின் குரல் கேட்டு, பின் னேரத்துக்குப் போயிருந்த நளினி, திடுக்கிட்டு இந்நேரத் துக்கு வருகிருள். மணியன் கோப்பியைக் கொடுக்க அதை வாங்கி மெதுவாசக் குடிக்கிருள்.

கோப்பிக்கு சீனி சற்று அதி கமாக இருந்தது அவளுக்குத் தெரியவில்லை.

## 3

**மா**லை ஐந்து மணி ஆகப் போகிறது. சின்னத்தம்பி அறை க்குள்ளேதான் இருக்கிருர். நளினி ஹோலுக்குள் இருந்து, காலையில் வந்த செய்திப் பத்தி ரிகையை எடுத்துச் சும்மா புரட் டிக் கொண்டிருக்கிருள். பத்திரி கையில் அவள் கண்கள்தான் இருந்தனவே தவிர மனம் அங் கேயில்லை. தன் இதயம் வேக மாக அடித்துக்கொள்வதைத் தானே உணருகிருள் அவள். 'ஏன்? . . . நான் ஏன் இப்படி உணர்ச்சி வசப்படுகிறேன்? அவ ருடன் ஏதாவது தொடர்பு வைத்

'முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ் மொழியே. முஸ்லிம் கள் தமிழிலேயே கல்வி கற்க வேண்டும். தமிழில் அரபுத் தமிழ், இஸ்லாம் தமிழ் என்றெல்லாம் கிடையாது. தமிழ் என்ருல் தமிழ்தான்!' என்று வற்புறுத் திச் சொல்லிருக்கிருர் மூதூர் மஜீத். முஸ்லிம்களிடம் இந்தக் கருத்து உறுதியாகப் பரவவேண் டும். தங்கள் தமிழ்மொழியை அவர்கள் புறக்கணித்ததால், மொழியைப் பொறுத்தமட்டில் அவர்கள் அனுதைகளாகி விடக் கூடிய ஆபத்து ஏற்படும்!



துக் கொள்ள விரும்புகிறேனு? ... அவரை. . .ச்சீ! என்ன நினைப்பு! ... எனக்கேன் இந்த நினைப்புகளெல்லாம்? பேசாமல் உள்ளே போய் இருந்து விட்டாலென்ன? அவர் வந்தால் அப்பா வந்து கதைக்கட்டுமே! . . . . . இருந்தால்தான் என்ன? பின்னேரங்களில் நான் இங்கே இருக்கிறது வழக்கந்தானே? . . . . என்னுடைய பேய் மனந்தான் சும்மா இல்லாததையெல்லாம் நினைத்துக்கொள்கிறது . . .'

லேசாகத் திறந்திருந்த கதவில் யாரோ 'லக், லக்' என்று மெதுவாகச் சுண்டும் சத்தம் கேட்கிறது.

நளினியின் இதயம் படு வேகமாகத் துடிக்கிறது.

கதவு மெதுவாகத் திறக்கப் படச் சுந்தரத்தின் தலை தெரிகிறது.

நளினி பேப்பரை பக்கத்தில் வைத்துவிட்டு எழுந்தவள், ''வாருங்கோ. . . இங்காலை இருங்கோ . . .'' என்று சொல்கிறுள். அதற்குமேல் எத்தனையோ விதமாக அவள் மனதுக்குள் செய்து பார்த்திருந்த ஒத்திகைகள் எல்லாம் அவளைக்கைவிட்டு விடவே, '' அப்பா, அப்பா! '' என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளே போகிறுள்.

தகப்பனுரைச் சுந்தரத்திடம் அனுப்பி விட்டுக் குசினிப் பக்கம் போனவள், என்ன செய்வதென்று தெரியாமல், சில நிமிஷங்கள் கருத்தில்லாமல் குறுக்கும் நெடுக்குமாக நடக்கிறுள், 'அப்பா ஒன்றும் நினைக்கமாட்டார். அப்படி ஏதும் நினைத்தாலும் நினைக்கட்டும் . . .'

சுந்தரம் வந்தால் தானும் கூடப்போயிருந்து கதைக்கவேண்டுமென்று முன்பு திடமாகத் தீர்மானித்திருந்தவளுக்கு, இப்போது 'அப்படிச் செய்வது நன்ருயிருக்காது. அவர்தான் என்ன நினைப்பார்?' என்று தோன்றுகிறது. பிறகு, 'கோப்பியைக் கொண்டுபோய்க் கொடுத்து விட்டு இருந்து கதைக்கலாம்' என்று நினைத்தவளாய், கோப்பி தயாரிக்கப்போனவள், 'கோப்பியா, டீயா' என்று சந்தேகப் படுகிறுள். 'போய்க் கேட்போமா?' என்று நினைத்தவளுக்கு துணிவு வரவில்லை. 'அவர் ஒன்றுமே வேண்டாமென்று சொல்லி விட்டால் என்ன செய்கிறது? ஆனபடியால் போய்க் கேட்கக் கூடாது' என்று தனக்குத்தானே போய்க்கேட்காததற்கு சமாதானமும் சொல்லிக்கொள்கிறுள். பிறகு 'டீயையே கொடுப்போம். அநேகமாய் எல்லாரும் டீ குடிப்பார்கள்' என்று தேனீர் போடுகிறுள்.

தேனீரைக் கிளாசில் ஊற்றி எடுத்தவள், திடீரென்று அந்தக் கடிதத்தின் நினைவுவந்தவளாய், படுக்கை அறைக்குள் ஓடிப் போய், அலுமாரியைத் திறந்து கடிதத்தை இரண்டாக மடித்து ரவிக்கைக்கை வைத்துக்கொண்டு திரும்பி வருகிறுள்.

தேனீரை எடுத்துக்கொண்டு வரும்போது அலுமாரியைப் பூட்டாமல் திறந்து விட்டபடி வந்தது நினைவுக்கு வருகிறது, 'கிடக்கட்டும். பிறகுபோய்ப் பூட்டலாம்' என்று நினைத்தவள், அதைப் பூட்டாமல் விட்டதன் மூலம் தன்னுடைய பரபரப்பைத் தானே உணர்ந்து கொண்டு இதழ்க்கடையில் மெல்லச் சிரிக்கிறுள்: இது, என்ன, விசர்த்தனம்!'

(தொடரும்)

புத்தக வெளியீட்டுத்துறையில் பிரிட்டன் மிக வேகமாக முன்னேறி வருகிறது. அங்கு வெளியாகும் புத்தகங்களில் அரைவாசிக்குமேல் வெளிநாடுகளுக்கே அனுப்பப்படுகின்றன. ஆசிய ஆபிரிக்க நாட்டு மாணவர்களுக்கு பிரிட்டிஸ் அரசாங்க ஆதரவுடன் இப்புத்தகங்களில் பல, மூன்றில் ஒரு பங்கு விலைக்கு விற்கப் படுகின்றன. பிரசித்தி பெற்ற பிரிட்டிஸ் கவுண்சில் வெளிநாடுகளில் **126** வாசிகசாலைகளை நடத்தி வருகிறது. இவ்வாசிகசாலைகளில் மொத்தம் இருபத்திரண்டு லட்சம் புத்தகங்கள் இருக்கின்றன !

வெயில் காலத்தில் அதிக தாகமாய் இருக்கும்போது இனிப்பூட்டப்பெற்ற குளிர்பானங்களைப் பருகப் பலரும் விரும்புகிறார்கள். தாகத்தைத் தீர்க்கக் கூடிய சிறந்த பொருள் சுத்தமான தண்ணீரே. தண்ணீர் நிறையக் குடித்தால், மலச் சிக்கல் நீங்கி, சாதாரணமாக அடிக்கடி ஏற்படும் அநேக நோய்களும் தடுக்கப்படுகின்றன. தண்ணீரில் குளிப்பதனால் உடலின் இரத்த ஓட்டம் சமநிலைப்படுத்தப்படுகிறது. — எவ்வித விலையுமில்லாமல் தண்ணீர் கிடைப்பதனால் அதன் அருமையை அநேகர் உணருவதில்லை. காற்றுக்கு அடுத்ததாக இவ்வுலகில் மிகவும் பெறுமதி வாய்ந்த பொருள் தண்ணீர்தான் !

கல்விமான்கள் பலர் சிந்திக்காமல் சோம்பியிருந்து அறிவிலிகள் ஆகிறார்கள். கல்வி அறிவற்ற சிலர் சிந்தித்து அறிஞராகி விடுகின்றனர்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு எம். என். ராஜம் மீண்டும் படவுலகுக்கு வருகிறார். ஜெயசங்கர் — பாரதி நடிக்கும் புதிய படமொன்றில் பாரதியின் தாயாராக நடிக்கிறார் எம். என். ராஜம்.

'தோரஹா' என்ற நியூவேவ் படத்தைத் தயாரித்த தயாள் சமீபத்தில் சென்னைக்கு வந்து புதுமுகத் தேர்வு ஒன்று நடத்தினார். தமிழகத்தின் புதுமுகங்கள் பலர் இந்தத் தேர்வுக்கு வந்து கவர்ச்சி உடையில் 'போஸ்' கொடுத்தார்கள். 'சான்ஸ்' கிடைக்குமென்றால் எப்படி நடிக்கவும் தயாராயிருக்கிறார்கள் இந்த புதுமுகங்கள் !

யூல் பிரெய்னர் மாதிரி 'சோ'வும் ஒரு ஃபாஷனுக்காகத் தலையை மொட்டையடித்திருப்பதாகப் பலரும் நினைத்திருக்கிறார்கள். மூல வியாதிக்காக



சோ வைத்தியம், செய்யப்போக, தலைமயிர் உதிர்ந்துவிட்டது.— இப்போது மீண்டும் வளர்கிறது: விரைவில் பழையசோவைப் பார்க்கலாம் !


நம்பி தயாநிதி, பெல்மதுளை.

★ வெள்ளியில் கேள்வி -பதில் கூப்பனை இப்போது காண வில்லையே?

கேள்விகள் குவிந்து கிடக்கின்றன. கூப்பனை வெளியிடாது விட்டால் குறையலாமென்று நினைத்தேன், தோல்வி எனக்குத் தான்!

ரி. தங்கராசா, புத்தளம்.

★ திரு. செல்வநாயகம், திரு. வி. என். நவரத்தினம் ஆகியோர் பதவி துறக்கவேண்டுமென்று வற்புறுத்தியவர்கள் இப்போது திடீரென மாறிய தன் மர்மம் என்ன?



தமிழர் கூட்டணியினர் பதவிதுறப்பது பற்றிய தீர்மானம் எடுக்க முன்பு வற்புறுத்தியிருப்பார்கள். 'துறக்கக்கூடாது' என்று கூட்டணி தீர்மானித்த பின் அதைப்பற்றிப்பேசாமலிருப்பதுதான் கடமை, கண்ணியம் கட்டுப்பாடு!

செல்வி வடிவேல் ராஜமணி,
அக்கரைப்பற்று.

★ கதிர்காமம் போன்ற தெய்வத் தலங்களுக்குச் செல்லும் பக்தர்களில் பலர் பிச்சை எடுத்துச் செல்கிறார்களே, அப்படி செய்வது சரிதானா?

கொள்ளையடித்தேனும் உல்லாச புரிகளுக்குச் செல்பவர்களை விட, பிச்சை எடுத்தாயினும் கதிர்காமம் செல்பவர்கள் மேலோர்தான்!

எம். றி. இஸ்ரான்லி,
முல்லைத்தீவு.

★ ஆரியக் கொள்கைகளை பிரதிபலிக்கும் ஓர் தமிழ்த்தினசரி தமிழின் பெருமையைப் பார்புகழவைக்கும் திராவிடத்தின் திறனதை இடையிடையே இயம்புவது ஏன்?

நீங்கள் எந்தத்தினசரியைப் பற்றிக் குறிப்பிடுகிறீர்களோ தெரியவில்லை. தமிழகத்தில் கூட இப்போது ஆரிய திராவிடப் பிரச்சினை பழங்கதையாகி விட்டதே! அங்கே இந்தி - தமிழ் பிரச்சினையும், இங்கே சிங்களம்-தமிழ் பிரச்சனையும்தான் இப்போது மேலோங்கி நிற்கின்றன.



ரி. எஸ், ரஞ்சன்,
யாழ்ப்பாணம்.

✱ தமிழர் கூட்டணி எடுக்கும் நடவடிக்கைகளினுல் தமிழருக்கு லாபமா, நட்டமா கிடைக்கும்?

தமிழருக்கு லாபம் கிடைக்க வேண்டுமென்றுதான் கூட்டணி நடவடிக்கை எடுக்கிறது. நாமும் லாபத்தையே எதிர்பார்த்திருப்போமாக!

நா. பொன்னுத்துரை,
கொழும்பு—13.

✱ உங்கள் 1-7-72 நாளிதழில் இரத்மலானை திரு. க. சண்முகராசா, சுயாட்சிக் கழகத் தலைவர் நவரத்தினத்தின் பிரச்சாரத்தைப்பற்றி கேட்ட கேள்விக்கு ஒரு போலியான பதில் அளித்துள்ளீர்கள். ... நீங்களும் நடுநிலைப் போர்வையில் இயங்கும் தடித்த தமிழரசுவாதியா? .. இப்போதாவது சண்முகராசாவின் கேள்விக்குப் பதில்கொடும்.

சண்முகராசாவின் கேள்விக்கு எனது பதிலைப் பாராட்டி அநேக கடிதங்கள் வந்திருக்கின்றன. உங்களைப் போன்றவருக்கு விளக்குவதானுல் சற்று விரிவாக எழுத வேண்டும் போலும்! அதற்கு இந்தப் பகுதி இடம் தராதே! நண்பரே, நான் எந்த 'வாதி' என்று கண்டுபிடிக்க முயன்றிருக்கிறீர்கள்! இருந்தும் உங்களுக்குப் பரிசு கிடைக்கவில்லை!

'யாழ்பாடி', நீர்வை

✱ ஈழத்தில் இலக்கிய வளர்ச்சியில் பங்குபற்றி முன்னணியில் நிற்கும் சஞ்சிகை யாது?

சற்றுப் பொறுங்கள். ஈழத்தில் இலக்கிய சஞ்சிகைகள் ஏதாவது வளர்ந்து நிலைக்கட்டும். அதன்பிறகு உங்கள் கேள்விக்குப் பதில் சொல்லலாம்.


''ஜோதி'' மஹாஜனக் கல்லூரி.
தெல்லிப்பழை.

✱ ஜனநாயகம் எங்கே?

இந்த நாட்டில் ''சேனநாயகம்'' இருந்திருக்கிறது. ''பண்டாரநாயகம்'' இருந்திருக்கிறது. ஆனுல் சரியான ''ஜனநாயகம்'' தான் இன்னமும் தோன்றவில்லை!

கே. சிவதாசன்,
பருத்தித்துறை.

✱ 'ஒரு தீப்பொறி' வந்திருக்கிறதே, பார்த்தீர்களா?



பார்த்தேன். தமிழ் மக்களின் அரசியலில் சூடு பிறந்தால் தீப்பொறியும் ஏதோ 'ஒரு' விதத்தில் வந்துவிடுகிறது. தினபதிச் செய்திகளுக்கு வெள்ளியில் சரியான மறுப்பு எழுதுங்களேன் என்று ஒரு வாசகர் கேட்டிருந்தார். தினபதியின் கருத்துரைகளுக்கும் 'அந்தனிசில்'லின் 'பாஷை'க்குந்தான் நல்ல பொருத்தம்!

கே. மீனு, பண்ணுகம்:

★ இன்று அறிஞர் அண்ணு உயிருடன் இருந்தால் ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் நிலைமை அறிந்து என்ன செய்வார்?



கருணுநிதியைப் போல அவரும் ஆதரவு வார்த்தைகளைச் சொல்ல முடியுமே தவிர வேறு எதுவும் 'செய்ய' முடியாதே! ஈழத்துத் தமிழர்கள் தங்கள் பிரச்சினைக்குத் தாங்களேதான் தீர்வுகாண வேண்டும்!

ரி. ராஜசுந்தரம் கொழும்பு-14.

★ இந்த நாடு இன்னமும் முன்னேருமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

ஒரே கூட்டத்தினரிடம் - இரண்டு 'லேபல்'களை வைத்துக் கொண்டு திரும்பத் திரும்ப ஒருவர் மாறி ஒருவராக ஆட்சிக்கு வந்து கொண்டிருக்கும் ஒரே கூட்டத்தினரிடம் இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பு கையளிக்கப்பட்டிருப்பதால்தான் இந்த நாடு இன்னமும் முன்னேருமல் இருக்கிறது!

செல்வி. ராஜேஸ்வரி,
களனியா.

★ இன்று உலகத்தில் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் நாடு அமெரிக்காவா, ஜப்பானு, சீனுவா?

அமெரிக்காவில் மக்களின் எண்ணங்கள் முன்னேறிக்கொண்டிருக்கின்றன. சீனுவில் மக்களின் அரசாங்கம் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. ஜப்பானில் மக்களின் வாழ்க்கை முன்னேறிக் கொண்டிருக்கிறது!

எஸ். கே. பாலா,
மடுல்சீமா

'நான் ரூபாவைச் சந்திக்கப் போகிறேன்' 'பூரணி உனக்குக் கேட்கிறதா?' என்பன போன்ற மனம் கவர் கதைகளைப்படைத்த 'விஜயா'யாரென அறியத்துடிக்கிறேன்...

உங்கள் துடிப்பை வெளியிட்டிருக்கிறேன். வெள்ளி வாசகர் யாராவது அந்த விஜயாவைப்பற்றிய விபரங்களை எனக்கு அனுப்பிவைத்தால் வெளியிடுவேன்.

க. சி. கணேசன்,
மாவனைத்தோட்டம்.

★ நம் அரசியல் வாதிகளுக்கு ஏதேனும் பதவிகள் கிடைத்துவிட்டால் உடனே அரசாங்கச் செலவில் வெளி நாடுகளுக்குச் செல்ல ஆசைப்படுகிருர்களே, ஏன்?

வெளிநாட்டுப் பயணம் என்பது இலங்கையில் சாதாரண குடிமகனுக்கு ஒரு எட்டாக் கொம்பு. பதவி என்ற ஏணியில் ஏறினுல்தான் அது எட்டுகிறது!

க. ராஜநாதன்
ஊர்காவற்றுறை

★ 'கண்ணதாசன்' கவிதைகளைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

உணர்ச்சி இழையோடும் நல்ல கவிதைகளை எழுதக்கூடிய அருமையான கவிஞர் கண்ணதாசன்! இவரது சொல்லாட்சி அற்புதமானது! ஒன்றுக்கொன்று முரண்படக்கூடிய கருத்துக்களைக்



கொண்ட பல கவிதைகளை இவர் எழுதியிருந்தாலும் அவற்றை வெகு அழகாக எழுதியிருக்கிறுர்! எந்தநேரத்தில் எது சரியென்று தோன்றுகின்றதோ அதை வைத்து இவர் உடனே கவிதை எழுதிவிடுகிறுர்—இவர் கவிதைகளில் காணப்படும் முரண்பாடுகளுக்குக் காரணம் இதுதான்! இவரைப்பற்றி 'சௌந்தராகைலாசம்' அம்மையார் ஒரு கவிதை எழுதியிருக்கிறுர்—அதில் ''தடுமாறும் மேதையவன்'' என்று அழகாகச் சொல்லியிருக்கிறுர்! கண்ணதாசனைப் பொறுத்தவரை இந்தவரிகள் நூற்றுக்கு நூறு உண்மையானவை! இவரது தடுமாறும் போதைக்குக் காரணங்கள் இரண்டு—ஒன்று உணர்ச்சி, மற்றது மது!

இ. சி. ஜெயபாலேந்திரா,
யாழ்ப்பாணம்.

★ எனது நண்பியின் தந்தையார் ஒரு முற்கோபக்காரராம்! அவருடன் எப்படிக்கதைப்பது?

உமது சிநேகிதி விஷயத்தில் அளவுக்கு அதிகமான சுதந்திரத்துடன் நீர் நடந்துகொள்ளத் தலைப்பட்டிருந்தால் உம்மைத் தடுத்து கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக உமது சிநேகிதி உம்மிடம் இந்த மாதிரிக் கதையளந்திருக்கவும் கூடும்! உண்மையிலேயே அவர் கோபக்காரராக இருந்தால் 'ஆடுகிற மாட்டை ஆடிக்கற; பாடுகிற மாட்டைப் பாடிக்கற' என்ற பழமொழியின்படி நடக்கவேண்டியதுதான்!


கே. பத்மநாதன், மாத்தளை

★ தமிழ் இளைஞர்களுக்கும் சிங்கள இளைஞர்களுக்குமிடையில் உள்ள வித்தியாசம் என்ன?

சில தமிழ் இளைஞர்கள் ஒன்றுகக் கூடிஞல் உடனே ஏதாவதொரு பெயரில் ஏதோ ஒரு சங்கத்தைத் தொடங்குவார்கள்! ஆளுக்கொரு உத்தியோகத்தை எடுத்துக்கொள்ளுவார்கள்! பின்னர் ஏதாவதொரு காரணத்தைக்காட்டி ஒருவரோடு ஒருவர் சண்டைபோட்டுக் கொண்டு பத்துத் திசையில் பிரிந்து போவார்கள்! சிங்கள இளைஞர்கள் இப்படி அல்ல - அவர்கள் ஒன்றுகக் கூடிஞல் ''போத்திலேத்'' திறப்பார்கள். அல்லது எங்காவது ''பிக்னிக்'' கிளம்புவார்கள்!

செ. நல்லையா, யாழ்ப்பாணம்.

★ எம். ஜி. ஆருக்கும் சிவாஜிக்குந்தான் எப்போதும் போட்டியாக இருக்கிறது. மற்ற நடிகர்கள் எவரும் இவர்களுடைய நிலைக்கு வராததேன்?



திறமை அவரவருடைய சொந்தமுயற்சியால் ஏற்படுவது. புகழ் ஏற்படுவதற்கு அதிர்ஷ்டமும், சூழலும் வேண்டும். நல்ல சூழலுடன் ஒரு புது நடிகர் இப்போது தோன்றியிருக்கிறார். தமிழக முதல்வரின் மகன் முத்து, செல்வாக்குள்ள நடிகர்வரிசைக்கு மிக விரைவில் வந்து விடுவார்!

இ. வரன், கட்டுபெத்தை.
(பரிசுபெறுபவர்)

★ அண்மையில் விடுதலை பெற்ற நாடு வங்கம்! அவர்களது போராட்டத்திற்கு நல்ல ஆதரவு தந்தது இலங்கைத் தமிழரசுக் கட்சி! இலங்கிலாந்தில் வங்க மக்களின் உரிமைப் போராட்டத்தை ஆதரித்து நடைபெற்ற கூட்டங்களில் சாவகச்சேரி நவமும் உரையாற்றினார்! ஆனால் நமது குடியரசு எதிர்ப்புப் போராட்டங்களை பி. பி. ஸி, அகில இந்திய வானொலி அவுஸ்திரேலிய வானொலி என்பவை ஒலிபரப்பியும் டாக்கா வானொலி மௌனம் சாதித்ததின் மர்மம் என்ன?

வங்க தேசத்தில் அவர்கள் தங்கள் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக நடத்திய போராட்டத்துடன் ஒப்பிடும்போது இங்கு நடைபெற்ற குடியரசு எதிர்ப்புப் போராட்ட நிகழ்ச்சிகள் ஒரு செய்தியாக வேனும் குறிப்பிடத்தக்க அளவுக்கு முக்கியமற்றதாக அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம்!

க. ஜெயம், மானிப்பாய்

★ கம்யூனிஸ்ட் கட்சி இன்னும் எவ்வளவு காலத்துக்கு அரசாங்கத்துடன் சேர்ந்து இருக்கும்?

உண்மையான சோஷலிஸ நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டைபோடும் பலர் அரசாங்கக் கட்சியிலேயே 'பெரிய மனிதர்'களாக இருப்பதை கம்யூனிஸ்ட் கட்சி நன்கு உணர்ந்திருக்கிறது. இந்தப் 'பெரிய மனிதர்'களின் முகமூடியைக் கிழித்து எறிவதற்கு காலம் கனியவேண்டும் என்று காத்திருக்கிறது கம்யூனிஸ்ட் கட்சி! ஒருவகையான தந்திரோபாயத்தினால் இந்தப் 'பெரிய மனிதர்களை' மட்டந்தட்ட முடியும் என்று நம்புகிறது கம்யூனிஸ்ட் கட்சி! அந்த நம்பிக்கை பொய்த்துவிட்டால் அடுத்த கணமே அரசாங்கத்திலிருந்து கம்யூனிஸ்ட் கட்சி வெளியேறி விடும்!

ந. செல்வராணி, திருமலை

★ மந்திரியாக வரவேண்டுமானால் என்ன தெரிந்திருக்க வேண்டும்?

வாய்க்கு வந்தபடியெல்லாம் வாக்குறுதி கொடுக்கத் தெரிந்திருக்க வேண்டும்!

எஸ். திருச்செல்வம் மானிப்பாய்

✯ இலங்கை அரசாங்கம் இந்தியர்களுடன் நட்புக் கொள்வதைக் காட்டிலும் சீனர்களுடன் நட்புக் கொள்வதை அதிகமாக விரும்புகிறது என்பது உண்மையா?

உண்மைதான்! வெளி நாடுகளில் இலங்கையின் தூதராக இருந்தவரும் அனுபவம் மிக்கவருமான சேர் சௌரத் குணவர்த்தன என்ற சிங்களப் பிரமுகரே இந்த உண்மையை பகிரங்கமாக கூறியிருக்கிருர். இதனுல் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைப் பற்றியும் அவர் மிகவும் கடுமையாக எச்சரித்து இருக்கிருர்! 'கெடுகுடி சொற்கேளாது' என்பது மாதிரியாகத்தான் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இருந்து வருகின்றன!

வே. சிதம்பரம் இரத்தினபுரி.

✯ மனித சமுதாயத்தில் ஏழையின் வாழ்க்கை என்ன? பணக்காரரின் வாழ்க்கை என்ன?

ஏழையின் வாழ்க்கை சக்கை! பணக்காரரின் வாழ்கை சாறு!


**வெள்ளி** விற்பனையாளர்

**பதுளை**

மீனும்பிகா நியூஸ் ஏஜன்சி
லோவர் வீதி.

ஸ்ரீலங்கா ஸ்டோர்ஸ்
12, தெற்கு வீதி.

**பண்டத்தரிப்பு**

கே. சுந்தரம்பிள்ளை
சைவானந்த கிளப்.

**மாத்தளை**

எஸ். எஸ். அன்னலிங்கம்
73, திருகோணமலை வீதி.




க. திரவியநாயகம்,
கொழும்பு.

✯ தமிழக முதல்வர் கருணுநிதியைப் பற்றி மிகப்புகழ்வதாக எழுதுகிறீர்களே; அவருடைய ஆட்சியில் விவசாயிகள் கிளர்ச்சியில் 15 பேருக்கு மேல் கொல்லப்பட்டிருக்கிருர்களே — இப்போது என்ன சொல்கிறீர்?

கருணுநிதியென்ன, தவறு செய்தவர் எவராக இருந்தாலும் அந்தத் தவறைக் கண்டித்து எழுத நான் தயங்க மாட்டேன். தமிழ் நாட்டுக்கிளர்ச்சியில் உயிர்ப்பலி ஏற்பட்டதற்கு யார் காரணம் என்பது இன்னும் சரிவரத் தெரியவில்லை. யார் காரணமாக இருந்தாலும் கருணுநிதிக்கு இது ஒரு காயந்தான். இதை அவர் எப்படி ஆற்றப் போகிருர், என்பதைத்தான் கவனிக்க வேண்டும்.

கு. சரஸ்வதி, கோப்பாய்

✯ வீரகேசரியை வெகுவாகப் பாராட்டுகிறீர்களே...?

சரியான செய்திகளை விரைவாகவும் பெருமளவுக்கு கட்சிச் சார்பற்ற முறையிலும் நடுநிலையில் நின்று ஒரு தினசரிப் பத்திரிகையின் கடமைகளைச் சரிவரச் செய்துவரும் வீரகேசரியைப் பாராட்டுவதில் என்ன தவறு?

■ தமிழரசுக்கட்சிச் செயலாளர் அமிர்தலிங்கம் ஆங்கிலப்படங்களை அடிக்கடி பார்க்கிறார்; 'தமிழ், தமிழ், எல்லாந் தமிழ்' என்று வெளியில் பேசிவிட்டு, இவர்மட்டும் ஆங்கிலப் படங்களைப் பார்க்கலாமா ?'' என்று ஒரு தினசரிப் பத்திரிகைக்கு 'உணர்ச்சி மிக்க இளை



ஞர்கள் பலர்' முறைப்பாடு செய்திருக்கிறார்கள்! முதல் பக்கத்தில் பெரிய செய்தியாகப் போடுகிற அளவுக்கு இந்த விஷயம் வந்திருக்கிறது. தமிழுணர்ச்சி உள்ளவர்கள் ஆங்கிலப் படம்' பார்க்கக் கூடாது என்று 'அந்த இளைஞர்கள்' கருதுவார்களானால், இலக்கியச் செல்வர் கனக. செந்திநாதனுக்கும், எனக்கும், இன்னும் பல தமிழுணர்ச்சியுள்ள இலக்கிய நண்பர்களுக்கும் கண்டனம் தெரிவிக்க வேண்டிவரும், — நாங்கள் எல்லோரும் ஆங்கிலப் படங்களை விரும்பிப் பார்க்கிறவர்கள்!

■ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் கொழும்பில் வசித்தவர்கள் தொகை இரண்டரை லட்சம் பேர். இன்றைய தொகை எட்டு லட்சம்! இதில் ஐந்து லட்சம் பேர் கொழும்பிலேயே நிரந்தரமாக இருப்பவர்கள். மீதி மூன்று லட்சம்பேர் வேலைகாரணமாகவும் பிற அலுவல்களுக்காகவும் தினசரி வந்து போகிறவர்கள் — இவ்வளவு பேரைச் சமாளிக்கக்கூடியதாக கொழும்பில் சுகாதார வசதிகளோ, போக்குவரத்து வசதிகளோ இல்லை! அடுத்த பத்து ஆண்டுகளில் இந்த நிலைமை படுமோசமாக மாறிவிடும்!

■ 'கடல்' -பிரபல எழுத்தாளர் 'சொக்கன்' எழுதிய **15** சிறுகதைகளின் தொகுப்பு. சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, கட்டுரை - இப்படி எல்லாத்துறைகளிலும் கைவந்த எழுத்தாளர் சொக்கன். 'நான் சமுதாயத்தின் ஒரு அங்கம். அதன் விருப்பு வெறுப்புகளையும் இன்பதுன்பங்களையும் ஆசை நிராசைகளையும் எனது கதைகளிலே பிரதிபலிக்கச் செய்வது என் கடமை' என்று நூலின் முகவுரையிலே சொக்கன் எழுதியிருக்கிறார். நண்பர்கள் வெளியீடு. விற்பனை: ச. கிருஷ்ணசாமி, 33, பெரிய கடை, யாழ்ப்பாணம். ரூ. 3-75

■ பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தமிழர் கூட்டணி உறுப்பினரைப்பார்த்துப் பேசியிருக்கிறார், 'தமிழ் மொழியும் நீதிமன்ற மொழியாக இருப்பது உங்களுக்கு கவலை தந்திருக்கிறது போலும். உங்களுக்கு ஆங்கிலம் தான் விருப்பமென்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் அதை அனுமதிக்க மாட்டேன்' என்று! பாராளுமன்றத்தில் எவ்வளவு கோமாளித்தனமாகவும் பேசலாமென்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்!

# ஐயகோ இவள் ...



எங்களூர்க் கோயிலில் திரு விழா—அங்கு
என்னுயிர்க் காதலி வருவதாய்ச் சொல்ல,
பொங்கும் உவகையில் ஊறி—ஒரு
புத்தொளி பெற்றது போலவே மாறி,

பத்துரூ பாவை எடுத்துச்—சட்டைப்
பையினுள் நன்கு தெரிந்திட வைத்தேன்!
எத்தனை யோநண்பர் வந்தும்—நான்
எல்லோரை யும்விட்டுத் தனிமையாய்ச் சென்றேன்!

நீலநி றத்தினில்த் தானே—அவள்
நித்தமும் சாரி உடுத்திடு கின்றாள்!
சாலப் பொருந்துமிவ் வண்ணம்—அந்தச்
சாரிதான் கட்டுவாள் என்பதும் திண்ணம்!

நீலநி றப்புதுச் சாரி—ஆஹா,
நிச்சயம் எந்தனின் காதலி யேதான்,
ஆலய வாசலில் நின்றாள்—அந்த
அழகினால் என்னுளம் தன்னையே வென்றாள்!

குறும்புகள் செய்வதிற் கள்ளி—இவள்
கோயில்கும் பிடுதல்போல் பாசாங்கு செய்து,
திரும்பியும் பாராது நின்றாள்—இவள்
திடுக்கிடச் செய்திட வேண்டுமென் றெண்ணி,

பின்னலைப் பின்னின் றிழுத்தேன்—அந்தப்
பேதை திடுக்கிட்டுத் திரும்பியே பார்த்தாள்!
என்னடா நான்செய் திடுவேன்!—அவள்
ஐயகோ எந்தனின் தங்கையோ தங்கை!

கொற்றை பி. கிருஷ்ணானந்தன்



யூ. என். பி தலைவர் டட்லி யின் குரல் மீண்டும் கேட்கத் தொடங்கியிருக்கிறது. எப்படி யாவது அரசாங்கத்தின் மீது மக்களின் வெறுப்பைக் கிளப்பி விடவேண்டுமென்பதே இவரு டைய விருப்பமாக இருக்கிறது. அரசாங்கக் கட்சியைத் தாக்குவ தற்குச் சந்நர்ப்பம் கிடைக்குமா னால் தமிழர் உரிமைகளுக்கு மண்போடவும் இவர் தயாரா கவே இருப்பார்!

தமிழக முதல்வர் கருணாநிதி 1971-ல் தமது பிறந்த தினத்தை பிச்சைக்காரர் புனர் வாழ்வுத் திட்டத்துடன் இணைத் துக் கொண்டாடினார். இந்த வரு டம் விழி இழந்தோருக்கு ஒளி அளிக்கும் திட்டத்துடன் இணைத் துக் கொண்டாடினார். அடுத்த வருடம் எப்படிக் கொண்டாடப் போகிறார்? அவருக்கு ஆலோ சனை கூறுவதுபோல வாசகர்கள் அபிப்பிராயத்தை எழுதினால் பரிசு தருவதாக ஒரு பத்திரிகை அறிவித்திருக்கிறது!

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, ரஷ்யக் கம்யூனிஸ்ட் என்றும் சீனக் கம்யூனிஸ்ட் என் றும் இரண்டாகப் பிரிந்து கிடக் கிறது. ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியினரிடையே இரு பெரும் பிரிவுகள் இருப்பது பகிரங்க ரக சியம். இப்போது சீனக் கம்யூ னிஸ்ட் கட்சியிலும் பெருவெடிப் புக் கண்டிருக்கிறது. இந்தக் கட்சியின் பொதுக் காரியதரிசி சண்முகதாசனை கட்சியிலிருந்து வெளியேற்றிவிட்டதாக, கட்சி யின் தலைமைச் செயற் குழு ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. '71, ஏப்பிரல் கலவரங்களோடு கைதுசெய்யப்பட்ட சண்முகதா சன் சமீபத்தில் விடுதலையான வர், இப்போது சீனாவில் இருக்கி றார். மிக விரைவில் இவர் இலங் கைக்குத் திரும்பி வருவார். இவர் வந்த பிறகுதான் கட்சி யின் உண்மையான நிலைமை வெளிப்படும். சண்முகதாசன் லேசுப்பட்டவரல்லர்!


**வெள்ளி** விற்பனையாளர்

**வவுனியா**

வளர்மதி ஸ்டோர்ஸ்
பஸ் நிலையம்

அனலாஸ் புத்தகசாலை

**கம்பளை**

எஸ். பி. செல்லமுத்துப்பிள்ளை
23, அம்பகமுவ வீதி.

**கேகாலை**

ஸ்ரீ ஆனந்தாஸ்
80, பிரதான வீதி.

**திருக்கேதீஸ்வரம்**

எஸ். பிரமேசம்பு.
பாப்பா மோட்டை.

# அன்புடன் சில வார்த்தைகள்.....

இளைஞர்கள் மத்தியில் இன்று மிகுந்த செல்வாக்குப் பெற்று விட்ட சஞ்சிகை வெள்ளி. விலையும் மிகக் குறைவாக இருக்கிறது.

கரணவாய்தெற்கு, **கண. மகேஸ்வரன்.**

'நளினியின் நாயகன்' தொடர்ச்சியை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

வேலணை-1, **க. அம்பிகாபதி**

முதல் இதழிலேயே நளினிக்கு உயிர் கொடுத்து விட்டீர்கள். அவள் வெறும் கற்பனைப்பாத்திரமல்ல. எமது வாழ்க்கையில் சந்திக்கின்ற ஒரு பெண் போலவே தோன்றுகிறாள்.

மட்டக்களப்பு. **'அமரா'**

'இலக்கியச் செல்வர் கனக செந்திநாதனிடம் பசுமை நினைவுகள் நிறைய இருக்கும். அவை காய்ந்து விடாமல் வெள்ளி மூலம் வெளிப்படுத்துங்கள்.

கொழும்பு-11. **எஸ். கந்தசாமி.**

தமிழ்த்திரையுலகில் தோன்றிய மிகச் சிறந்த ஒரு கலைஞர் என்று பாலையாவைப் பாராட்டியுள்ளீர்கள். உண்மை. அவர் நடித்த 'என்னதான் முடிவு' படத்தைப்பார்த்த பிரிதிவிராஜ் சொன்னாராம், 'பாலையாவைப் போன்ற ஒரு சிறந்த நடிகரை அகில இந்தியாவிலும் நான் கண்டதில்லை!' என்று.

நாவலப்பிட்டி. **எஸ். கே. ராதா**

புதிய நூல்களை அறிமுகப்படுத்துவது ஒரு நல்ல பகுதி. தொடர்ந்து செய்யுங்கள்.

யாழ்ப்பாணம். **அ. நடராசன்**

(புதிய நூல்களை வெளியிடுவோர் அனுப்பிவைத்தால் நிச்சயம் அறிமுகம் செய்வேன் — ஆசிரியர்.)

'ஒரு தேவதூதன் வரவேண்டுமென்ற' உங்கள் நல்லெண்ணத்தை வரவேற்கிறேன். ஆனால் போட்டியும் பூசலும் நிறைந்து கிடக்கும் இந்தத் தமிழ் தலைவர்கள் மத்தியில் அவன் வரமாட்டான்.

வவுனியா. **கே. பொன்னம்பலம்**

'இலக்கியச் செல்வ'ரின்

**பசுமை நினைவுகள்**

அடுத்த இதழில்.




அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்
அச்சுப்பதிவு : ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

# பிரகாசமான சலவைக்கு...




CSK சி.எஸ்.கே.மில்ஸ்

யாழ்ப்பாணம்.